**2020 ம் ஆண்டு ஜுன் மாதம் 5ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சிறப்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

**பொருள் எண். 1.**

விருத்தாசலம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2020–2021 ன் கீழ் ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் 3 சிப்பங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிகளுக்கு கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதிக்காக அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | சிப்பம் எண் |
|---|---|---|---|---|
| 1. | 7,16,17,31,32 | வார்டு எண். 7 கண்மணி நகர், வார்டு எண். 16 திலகர் வீதி மற்றும் தெற்கு பெரியார் நகர் தெருக்கள் மற்றும் வார்டு எண். 17 பூதாமூர் பழைய காலனி, வார்டு எண். 31. தில்லை நகர் மெயின்ரோடு மற்றும் வார்டு எண். 32. சாவடிக்குப்பம் மெயின் ரோடு தார்சாலை அமைக்கும் பணி. | 175.00 | I |
| 2. | 6,7,10,12,13 | வார்டு எண். 6 சரோஜினி நகர், வார்டு எண். 7 அந்தோணியார் நகர், வார்டு எண். 10 கிருஷ்ணா நகர், வார்டு எண். 12, வடக்கு வீரபாண்டியன் தெரு மற்றும் வார்டு எண். 13 திருவள்ளுவர் நகர் தார்சாலை அமைக்கும் பணி. | 150.00 | II |
| 3. | 16,24,26,27,28,31 | வார்டு எண். 16 ஆப்பிள் தெரு, கங்கை வீதி, யமுனை வீதி, காவேரி தெரு, வார்டு எண். 24. தங்கமணி கார்டன், வார்டு எண். 26, பழமலைநாதர் நகர் 6வது தெரு, வார்டு எண். 27 முனியப்பர் கோயில் தெரு மற்றும் வார்டு எண். 28 ராமன் நாயர் நகர், தமிழ்நகர் மற்றும் வார்டு எண். 31. அரசு மருத்துவமனை முதல் மேட்டுக் காலனி வரை தார்சாலை அமைக்கும் பணி. | 175.00 | III |
| | | **மொத்தம்** | **500.00** | |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியின் நிதி நிலைமையை கருத்திற் கொண்டு அரசு முழு மான்யமாக வழங்க கோரி கருத்துரு அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1988/2020/இ1)**

**பொருள் எண். 2.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16ல் காமராஜர் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் தார்சாலையை விட தாழ்வாக உள்ளதால் சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் தவறுதலாக தவறி வடிகாலில் அடிக்கடி விழுந்து விபத்து ஏற்படுகிறது. எனவே, மேற்படி மழைநீர் வடிகால் பக்கச்சுவரை தார்சாலை மட்டத்திற்கு உயர்த்தி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,31,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 3.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16ல் வடக்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதிய போர்வெல் அமைக்க சுற்றுக்சுவர் இடிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி புதிய போர்வெல் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுவிட்டதால் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தின் பாதுகாப்பு கருதி புதிய சுற்றுச்சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 4,72,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 4.**

விருத்தாசலம் நகராட்சியில் Announcement திட்டம் 2020–2021 ன் கீழ் ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிகளுக்கு கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதிக்காக அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 1 | வயலூர் (P1) குளம் தூர் வாரும் பணி | 10.00 |
| 2. | 1 | வயலூர் (P2) குளம் தூர் வாரும் பணி | 10.00 |
| | | **மொத்தம்** | **20.00** |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2132/2020/இ1)